2018 ஜூன் 7]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வழக்கமாகச் சொல்வதைப்போல், அப்படியே சொல்லிவிட்டீர்கள்போல. (சிரிப்பு)*

திரு. துரைமுருகன்: *அவரை வடபழனி காவல் நிலையத்தில் வைத்துள்ளார்கள் என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அது என்ன என்று பார்க்கலாம். உட்காருங்கள். என்ன என்று விசாரிக்கலாம்.*

THIRU DURAIMURUGAN: I am expecting something from you.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அது என்ன என்று விசாரிக்கலாம், உட்காருங்கள். (குறுக்கீடு)*

(ஏ) மாவட்ட காஜிக்களுக்குத் தொகுப்பூதியம் வழங்கியமைக்கு நன்றி தெரிவித்தல்–மீதமுள்ள காஜிக்களுக்கும் வழங்க வேண்டுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர், என்னவென்று சொல்லுங்கள்.*

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்றி சொல்வதற்காகத்தான் வாய்ப்பு கேட்டேன், வேறொன்றுமில்லை. 30 வருட காலமாக நாங்கள் சொல்லி வந்த ஜமாத்களாக இருக்கக்கூடிய பள்ளிவாசல்களினுடைய திருமணங்கள் மற்ற காரியங்களையெல்லாம் ஒழுங்குபடுத்தக்கூடிய காஜிக்களுக்கு தொகுப்பூதியம் வழங்க வேண்டுமென்று இஸ்லாமிய சமுதாயத்தின் சார்பாக நீண்ட நாள் கோரிக்கையாக வைக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் சார்பாக எங்களுடைய தலைவர் பேராசிரியர் காதர் மொய்தீன் அவர்களும் தொடர்ந்து வலியுறுத்தி வந்தார்கள். அதை இந்த அரசாங்கம் மிகுந்த பெருந்தன்மையோடு ஏற்றுக் கொண்டதன் அடிப்படையில், மாவட்ட காஜிக்கள் 7 பேருக்கு ரூ.20,000/- தொகுப்பூதியமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், துறையைச் சார்ந்த மாண்புமிகு அமைச்சர் அவர்களும் வழங்கியிருக்கின்றார்கள். அதற்காக, அவர்களுக்கு இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் சார்பாகவும், சமுதாயத்தின் சார்பாகவும் உலாமாக்களின் சார்பாகவும் எங்களுடைய மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றோம். பண்டிகைக் காலம் வருவதால் 7 பேருக்கு வழங்கியிருக்கின்றீர்கள். மீதியுள்ள காஜிக்களுக்கும் அந்தத் தொகையை விரைவாக வழங்க வேண்டுமென்று உங்களை வேண்டிக் கேட்டுக்கொள்கின்றேன்.*